Deposition of Witness for : PW-3 | Date : 14/12/2023

Case No. : O.S. 469/2019 | Nationality : Indian

Name : ஆசைதம்பி | Religion :

Father's/Husband's Name : மாரிமுத்து | Age :52

Village :

Taluk :

வா.சா.3

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் வழக்கறிஞர் தயார் செய்தார். கையெழுத்து மட்டும் நான் செய்தேன் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்களை யார் கூறினார் என்றால் நான் தான் கூறினேன். 7 ம் வாதி சுரேஷ் குடியிருக்கும் இடம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்று நான் கூறியிருப்பதற்கு ஆவணங்கள் எதையும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்தே சுரேஷ் வீடு அங்கு உள்ளது என்றால் சரிதான். சுரேஷின் வீட்டை சுற்றி தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். தென்னை மரங்களை பாதுகாப்பு செய்து வளர்க்க வேண்டும் என்றாலும், அது தானாக வளரும் மரம் இல்லை என்றாலும் சரிதான். சுரேஷ் குடியிருக்கும் வீட்டில் 7 தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரிதான். அனைத்து மரங்களும் நேராக வளர்ந்த மரங்கள் என்றால் 4 மரங்கள் நேராக வளர்ந்துள்ளது. 3 மரங்கள் வளைந்துள்ளது. அதில் ஒரு மரம் வெட்டப்பட்டுவிட்டது. அனைத்து மரங்களும் சுரேஷின் வீட்டிற்குள் தான் இருந்தது என்றால் சரிதான்.

2. சுரேஷ் வீட்டின் எந்த பக்கம் இருந்த மரம் வளைவாக இருந்து என்றால் வீட்டிற்கு கிழக்கு பக்கம் இருந்த மரம் வளைவாக இருந்தது. வளைவாக இருந்தது என்றால் மரம் சுற்றி சுற்றி இருந்ததா என்றால் பக்கத்து இடத்தை பாதிக்கும் அளவிற்கு வளைந்து

இருந்தது. என்ன பாதிப்பு ஏற்பட்டது என்றால் பக்கத்து வீட்டில் குழந்தைகள் இருந்ததால் அவர்கள் மீது மரத்திலிருந்து ஏதும் விழுந்துவிடலாம் என்பதால் மரம் வெட்டப்பட்டது. 1ம் வாதி ராமசாமியின் மகன்கள் அந்த இடத்தில் வரிசையாக வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். வாதிகள் கட்டியுள்ள வீடு என்ன மாதிரியான வீடுகள் என்றால் அனைத்தும் மாடி வீடுகள் தான்.

3. வெட்டப்பட்ட மரம் காரைக்கால் மெயின்ரோட்டில் இருந்து எத்தனை அடி தூரத்தில் இருந்தது என்றால் ரோட்டில் இருந்து தெற்கே சுமார் 4 அல்லது 5 அடி தூரத்தில் இருந்தது. வெட்டப்பட்ட மரத்திற்கு கிழக்கே யாருடைய வீடு உள்ளது என்றால் ராமசாமியின் வீடு உள்ளது. மரம் எந்த பக்கம் சாய்ந்திருந்தது என்றால் கிழக்கு பக்கம் சாய்ந்திருந்தது. வெட்டப்பட்ட மரத்திற்கும் ராமசாமியின் வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி இருந்தது என்றால் மரம் ராமசாமியின் வீட்டின் கூரை மேல் சாய்ந்திருந்தது. வெட்டப்பட்ட மரம் வீட்டின் மேல் சாய்ந்திருந்ததால் மரத்திலிருந்து ஏதும் விழுந்தால் யார் உயிருக்கும் ஆபத்து இல்லை என்றால் சரியல்ல.

4. அந்த சொத்திற்கு அருகில் மரம் இழைக்கும் பட்டறை ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் உயிர் மரத்தை ஏலம் எடுத்த நபர் தான் என்பதால் எனக்கு மேற்படி விவரங்கள் எவ்வாறு தெரியும் என்றால் நானும் அந்த ஊரை சேர்ந்தவர் என்பதால் தெரியும். யார் யாருக்கு இடையே எந்த பஞ்சாயத்து நடந்தது என்றால் ராமசாமி குடும்பத்திற்கும் அலெக்சாண்டர் குடும்பத்திற்கும் தினமும் பஞ்சாயத்து நடக்கும். நான் புதூரில் எந்த இடத்தில் கடை வைத்துள்ளேன் என்றால் தாவா சொத்திலிருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் எனது கடை அமைந்துள்ளது. எனது வீடும் புதூரில் உள்ளது. அது கடையில் இருந்து மேற்கே உள்ளது. காலை எத்தனை மணிக்கு கடைக்கு செல்வேன் என்றால் காலை 07.00 மணிக்கு செல்வேன். அதன் பிறகு மதியம் சாப்பிட வந்துவிட்டு இரவு 08.00 மணிக்கு

கடையை சாத்திவிடுவேன். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான்.

5. சுரேஷ் போக்குவரத்து துறையில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் காலையில் பணிக்கு சென்றுவிட்டு இரவு தான் திரும்புவார் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் எந்த தேதியில் பிரச்சனை செய்து கொண்டார்கள் என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. தென்னை மரம் வெட்டப்பட்ட போது எத்தனை தேங்காய் இருந்தது, எத்தனை மட்டைகள் இருந்தது என்றால் தெரியாது. மரத்தை எத்தனை துண்டுகளாக வெட்டினோம் என்றால் 4 துண்டுகளாக வெட்டினோம். எத்தனை அடி துண்டுகளாக வெட்டினோம் என்றால் 15 அடி துண்டுகளாக வெட்டினோம். அந்த தென்னை மரம் 60 அடி உள்ள தென்னை மரம் என்றால் சரிதான். 60 அடி உயரமுள்ள தென்னை மரத்திற்கு குறைந்தது 50 வயது இருக்கலாம் என்றால் சரிதான்.

6. காய்ப்புள்ள உயிர் தென்னை மரத்தை தான் நான் பணம் செலுத்தி ஏலத்திற்கு எடுத்தேன் என்றால் சரிதான். எவ்வளவு ஏலத்தொகை செலுத்தினேன் என்றால் ஏலத்தொகையாக ரூ. 1150/- மற்றும் வரியாக ரூ.167/- செலுத்தினேன். பணத்தை வங்கியில் செலுத்தினேனா என்றால் இல்லை. எஸ்.புதூர் பொதுப்பணித்துறை அலுவலகத்தில் செலுத்தினேன். அதற்கு ரசீது கொடுத்தார்கள். ரசீது தற்போது என்னிடம் இல்லை. நான் ஏலத்தொகை செலுத்தியது எதற்கும் பயன்படாத கீழே விழுந்து மக்கி போன மரத்திற்காக என்று பொதுப்பணித்துறையால் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் உயிர் மரத்தை தான் ஏலத்திற்கு எடுத்தேன். பொதுப்பணித்துறையால் அளிக்கப்பட்டுள்ள சா.சா.ஆ.8 ஏல அறிக்கையில் அந்த மரம் எதற்கும் பயன்படாது எனவும், எரிபொருளாக மட்டும் பயன்படும் எனவும் சான்றளிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் உயிர் மரத்தை தான் ஏலத்திற்கு எடுத்தேன்.

7. நான் தென்னை மரத்தை ஏலம் எடுத்தற்காக எனக்கு கொடுக்கப்பட்ட ரசீதினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். அந்த ரசீதை பார்வையிட்டால் தான் நான் ஏலம் எடுத்த தென்னை மரம் உயிர் மரமா அல்லது பட்டுப்போன மரமா என்பது தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எனக்கு யார் சொல்லிக்கொடுத்தது என்றால் நான் தான் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு பஞ்சர் ஒட்டும் கடையை தவிர வேறு எதுவும் தொழில் இல்லை என்றால் காளவாய் வைத்துள்ளேன். யார் யார் சண்டை போட்டுக்கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றால் சரிதான்.

8. மரம் வெட்டப்பட்டபோது பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்தார்கள் என்றால் சரிதான். வெட்டப்பட்ட மரம் உயிர் மரமாக இருப்பதால் அதனை வெட்டக்கூடாது என்றும், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் கூறி என்னை தடுத்தார்கள் என்றால் சரிதான். தென்னை மரத்தில் உள்ள தேங்காய், மட்டை ஆகியவற்றை சுரேஷ் தான் வெட்டிக்கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுரேஷ் அவற்றை வெட்டும்போது நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். சட்டத்திற்கு புறம்பாக மோசடியான ஆவணங்கள் அடிப்படையில் வெட்டக்கூடாத மரத்தினை வெட்டுவதற்கு நானும் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாத சம்பவத்தை தெரிந்ததாக வாதிகள் தரப்பில் சொல்லிக்கொடுத்ததற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by

him/her to be correct.

/sd/N.Sivapalani/
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.